



தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885, Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 24

# கொவிட் வைரஸ் பரவல் நீண்ட காலம் தொடரும் - உலக சுகாதார அமைப்பு



கொவிட் வைரஸ் பெருந்தொற்று பரவல் நீண்ட காலத்திற்கு தொடரும் என, உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. சீனாவில் கடந்த 2019ம் ஆண்டின் இறுதியில் கண்டறியப்பட்ட கொவிட் வைரஸ் தொற்று, தற்போது வரை உலகையே உலுக்கி வருகிறது.

இந்நிலையில், கொவிட் வைரஸ் பரவல் குறித்து உலக சுகாதார அமைப்பைச் சேர்ந்த பூனம் கெத்ரபால் சிங், கொவிட் வைரஸ் பெருந்தொற்று நீண்ட காலத்திற்கு பரவும். முதல், 2வது அலைகளின் போது ஏற்பட்ட நோய்த்தொற்று மற்றும் தடுப்பூசி பயன்பாடு கொவிட் வைரசுக்கு எதிரான எதிர்ப்புத் திறனை அடைய உதவலாம். ஆனாலும், உலக நாடுகள் வலுவான பொதுச் சுகாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். *(03)*

# சர்வதேச சுயாதீன விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவேண்டும் - ஹம்சி குணரட்ணம்



இலங்கையின் உள்நாட்டு மோதல் குறித்து விசாரணைகள் இடம்பெறவேண்டும். ஐ.நா சர்வதேச சுயாதீன விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவேண்டும் என நோர்வேயின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள ஹம்சி குணரட்ணம் தெரிவித்துள்ளார். தமிழ்-சிங்கள பத்திரிகையாளர்களுடான டிஜிட்டல் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உலகின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தமிழ் சிங்கள பத்திரிகையாளர்களுடன் டிஜிட்டல் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தேன். நோர்வே நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் பல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டமையே இதற்குக் காரணம். நான் நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமை பலருக்கு பெரும் விடயம் என்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். இதேவேளை நான் குரல் கொடுக்கின்ற, நான் எதற்காக நாடாளுமன்றம் சென்றேனோ அந்த விடயங்கள் குறித்து கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடவேண்டியது முக்கியமானது என நான் கருதுகின்றேன். *(03)*

## இலங்கை வருபவர்களுக்கான புதிய சுகாதார வழிகாட்டுதல்கள்




ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி முதல் முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட நிலையில் இலங்கைக்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளுக்கான புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு சுகாதார அமைச்சு இதனை தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் பூரண தடுப்பூசி செலுத்திக்கொண்டு இரண்டு வாரங்கள் கடந்த நிலையில் நாட்டிற்கு வருகை தருவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் எடுத்த பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்படவில்லை எனின் இலங்கையில் வைத்து அவருக்கு பிசிஆர் பரிசோதனை செய்யத் தேவையில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மத்தள மற்றும் கட்டுநாயக்க இரு விமான நிலையங்களிலும் இந்த நடைமுறை பின்பற்றப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

## அரிசி வகைகளுக்கான புதிய விலை

அரிசிக்கான அதிக பட்ச சில்லரை விலை நீக்கப்பட்டதை தொடர்ந்து மூன்று வகை அரிசிகளுக்கான விலையினை பாரிய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ளது. அதனடிப்படையில் நாட்டரிசி ஒரு கிலோ 115 ரூபாவாகவும். சம்பா அரிசி ஒரு கிலோ 140 ரூபாவாகவும் மற்றும் கீரி சம்பா ஒரு கிலோ 165 ரூபாவாகவும் விலை குறிப்பிடப்பட்டுள்ளது. நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது குறித்த சங்கத்தின் தலைவர் டட்லி சிறிசேன இதனை தெரிவித்துள்ளார். அத்துடன் நாட்டரிசி ஒரு கிலோவை 62.50 ரூபாவிற்கும். சம்பா அரிசி ஒரு கிலோவை 70 ரூபாவிற்கும் மற்றும் கீரி சம்பா ஒரு கிலோவை 80 ரூபாவிற்கும் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## துன்பத்திற்குள் சிக்கித் தவிக்கும் மக்கள்

உலகளாவிய ரீதியில் பரவியுள்ள கொவிட் வைரஸ் தொற்றினால் இலங்கையும் வெகுவாகப் பாதித்துள்ளது. தொடர்ந்தும் இந்த வைரசின் திரிபான டெல்டா இலங்கையை வேகமாகத் தாக்கி உயிரிழப்புக்கள் 13000 அண்மித்துள்ளது. மக்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளார்கள். வெளி மாவட்டங்களுக்கு தொழிலுக்கு சென்ற இளைஞர்கள் வீடுகளிலும் அல்லது வேலை பார்த்த இடங்களிலும் முடங்கிப்போயுள்ளனர். அதே வேளை இந்த நெருக்கடிகளுக்குள் சிக்குண்டு அரசாங்கம் பொருளாதார ரீதியாக கடுமையான சவாலை எதிர்கொண்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் இவ் இக்கட்டான காலத்தில் உயர்வடைந்துள்ளமையானது மக்களுக்கு மேலும் மேலும் தலையிடியினையினைக் கொடுத்துள்ளது.

கோதுமை மா. அரிசி. மரக்கறி வகைகள். என அனைத்தும் இன்று விலையேற்றத்தைக் கண்டுள்ளன. வேலையினை இழந்து நிற்கும் மக்கள் இவ் நிலையினைக் கண்டு செய்வதறியாது புலம்பும் நிலையினைக் காண்கிறோம். அரசு மேலும் மேலும் பிற நாடுகளிடம் இருந்து கடன்களைப் பெறும் அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

எனினும் நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப் படுத்தல் ஊரடங்கு சட்டமானது ஒக்டோபர் முதலாம் திகதியுடன் நீக்கப் படுவதற்கான சாத்தியம் தெளிவாகத் தெரிகின்றது. தற்போது நாட்டின் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையும். தொற்றாளர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சி அடைந்துள்ளதை தகவல்களின் மூலம் அறிய முடிகின்றது. இந்நிலையில் ஒக்டோபரில் இருந்து நாடு புதிதாக பயணிக்கப்போகிறது.

எனினும் மிக விரைவாக நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் புதிய திட்டங்களை வகுத்து அரசு முறையாகச் செயற்பட வேண்டும். தொடர்ச்சியாக இவ் விலையேற்றங்களுடன் நாடு பயணிக்க முடியாது. அது அரசிற்கும் ஆபத்தாக அமையும். ஏற்கனவே அரசின் செயற்பாடுகளில் மக்கள் அதிருப்தியடைந்துள்ள நிலையில், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளும் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாடசாலைகள் திறக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளதாகவும். பல்கலைக்கழகங்களையும் மீள ஆரம்பிக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுப்போக்குவரத்துக்களில் கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார வழிமுறைகள் அரசினால் வெளியிடப்பட்டுள்ளன. நாடு திறக்கப்பட்டாலும் உலகளாவிய ரீதியில், இலங்கையில் இவ் வைரசின் தாக்கம் முழுமையாகக் குறையவில்லை என்பதை கவனத்திற்கொண்டு நாமும் செயற்படுவது சிறந்தது.

## தொடர்ந்தும் மழை பெய்யக்கூடிய சாத்தியம்



மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல், தென் மற்றும் மேல் மாகாணங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 35-45 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.

**நாட்டில் மேலும் 55 கொவிட் மரணங்கள் நேற்று (28.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,786 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 932 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 515,524 ஆக அதிகரித்துள்ளது.**

## அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் பட்சத்தில் தான் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்

தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் பட்சத்தில் தான் நாங்கள் நிலையான சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்த முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அம்பாறை நாவிதன்வெளியில் அமைந்துள்ள பாராளும ன்ற உறுப்பினர் த.கலையரசனின் காரியாலயத்தில் நேற்று (28) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நாட்டை பொறுத்த வரையில் தமிழ் சமூகம் நீண்ட காலமாக தீர்வுகாண முடியாதவர்களாகவே இருந்துகொண்டு இருக்கின்றோம். தமிழர்களாகிய நாங்கள் நீண்டகாலமாக அடக்குமுறைக்குள் அகப்பட்டு கொண்டிருக்கின்றோம்.

இன்று வரைக்கும் ஆட்சி செய்துவரும் அரசாங்கங்கள், அரசியல் தலைவர்கள் தீர்வு திட்டங்களை வழங்கவில்லை என்ற அடிப்படையில் நாங்கள் பல ஏமாற்றங்களை பெற்று சர்வதேச ரீதியாக எமது மக்களுக்கு நிலையான தீர்வு கிடைக்கப்பெற வேண்டும் என்பதில் எமது தலைவர்கள் மும்முரமாக செயற்படுவதை நீங்கள் அறிவீர்கள். அந்த அடிப்படையில் தான் ஐ.நா பிரதிநிதிகளுடனான சந்திப்பும் நடைபெறவுள்ளது.

வடகிழக்கு பிரதேசத்தில் இன ரீதியான அடக்குமுறை, இன அழிப்புகள் நடைபெற்றுள்ளது. ஆனால் இற்றைவரைக்குமாக அதற்குரிய நியாயபூர்வமான தீர்வுகள் கிடைக்கப்பெறவில்லையே என்பதே எமது தமிழ் தரப்பிலிருந்து தொடுக்கப்படும் ஒரு வினாவாகும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடையத்தில் இந்த அரசாங்கம் நம்பிக்கையான எந்தவிதமான தீர்மானங்களையும், திட்டத்தினையும் அந்த மக்களுக்காக முன்னெடுக்கவில்லை என்ற





இவ்வாறான குற்றச்சாட்டுகளை ஒன்றன்பின் ஒன்றாக சுமத்தக் கூடிய வகையில் இந்த அரசாங்கம் இருந்து கொண்டிருக்கின்றது. அதன்படியே தான் நாட்டின் ஜனாதிபதி ஐ.நா சபையில் உள்ளக பொறிமுறை அடிப்படையில் இதற்கான தீர்வுகளை வழங்குவோம் என்று கூறியிருக்கிறார்.

நாட்டில் யுத்தம் முடிந்த கையோடு எந்தவிதமான முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் செயற்படுத்த முடியாத இந்த அரசாங்கத்தில் மீது எவ்வாறு நம்பிக்கை ஏற்படும் என்ற வினாவினை தொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அதனடிப்படையிலேதான் நாங்கள் வலியுறுத்தி வருகின்ற ஒரு விடையம் சர்வதேச ரீதியாக எமது பிரச்சினைகள் கையாளப்பட வேண்டும் . ஆகவே நீதியான நியாயமான அரசியல் தீர்வினை எமது மக்கள் விரும்புகின்றனர். அதனடிப்படையில் அரசு செயற்பட வேண்டும் என்பதே எமது அவா.

எமது தலைவர்கள் வலியுறுத்தியதை போன்று பிளவுபடாததும், பிரிக்கப்படாததுமான நாட்டிற்குள் அதி உச்ச அதிகார பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்ற அரசியல் அதிகாரத்தை எமது மக்கள் நாடி நிற்கின்றனர். ஏனென்றால் நீண்டகாலமாக பாதிக்கப்பட்டவர்கள் அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் பட்சத்தில் தான் நாங்கள் நிலையான சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்த முடியும் என்பதே எமது கருத்து என அவர் தெரிவித்தார்.

**(மட்டக்களப்பு நிருபர் சரவணன்)**

## கலகொட அத்தே ஞான...

**கேள்வி :** உள்ளகப் பொறிமுறை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :** உள்ளகப் பொறிமுறை எமக்குத் தேவை. சர்வதேச பொறிமுறை என்பது இதுவரையிலும் சாத்தியப்படவில்லை. எமது பிரச்சினைகள் உள்ளகப் பொறிமுறையின் மூலம் தீர்க்கப்படவேண்டும். அதற்கான வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுக்கவேண்டும் என்று நான் கூறுகின்றேன். சர்வதேசப் பொறிமுறையினால் தீர்வுகள் கிடைத்தால் வரவேற்கத்தக்கது. ஆனால் இப்பிரச்சினைகள் நீண்ட காலமாக இழுபறியில் செல்கின்றது. இது ஒரு பயனற்ற செயற்பாடாகவே நான் பார்க்கிறேன். உள்ளகப் பொறிமுறையின் மூலம் வடகிழக்கு இணைந்த ஒரு சுயாட்சி எமக்கு கிடைக்கப்பெறுமாக விருந்தால் அது வரவேற்கத்தக்கது. என்னைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச மூலம் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்குமா என்றால் அது வெறும் பகல் கனவுதான். இருப்பினும் நாம் தமிழினத்திற்காக தொடர்ந்தும் குரல் கொடுப்போம். எமக்கான தீர்வுகள் எட்டப்படும் வரையில் எமது அரசியல் பணிகள் மக்களுக்காகத் தொடரும்.

**கேள்வி :** வடகிழக்கு, மலையகம் என்று யுத்த காலத்திலும், அதற்குப் பின்னரான காலத்திலும் நீங்கள் தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுத்து வருகின்றீர்கள். அந்த அடிப்படையில் இந்த கேள்வியை உங்களிடம் கேட்பது சிறப்பானது. அதாவது தமிழ் மக்களுக்கானத் தீர்வுத்திட்டத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?

**பதில் :** நம்பிக்கை இருக்கிறது. எந்தவகையில் என்றால் நாம் ஒற்றுமையாகச் செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரமே. தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் வடகிழக்கு, மலையகம், முஸ்லீம் தலைவர்கள் என்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் நின்று அரசுக்கெதிராக அறவழிப் போராட்டங்களை முன்னெடுத்தால், எமது இலக்கினை அடைய முடியும். அரசாங்கம் தமிழர் பிரச்சினைகளை குழப்புவதற்கு பல்வேறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற்றுத்தரும் நோக்கில் அவர்கள் எந்த காலத்திலும் செயற்படவில்லை. காலத்திற்குக் காலம் அரசியல் மாற்றம் கொண்டுவரப்படும் போதெல்லாம் ஏதோவொரு கருத்தினைக் கூறி குழப்புகின்றனர். இன்று சர்வதேசத்தின் ஊடாக ஒரு தீர்வு என்று கூறப்படுகின்றது. தற்போதைய அரசினது செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கான தீர்வுகளை நோக்கி பயணிப்பதாக இல்லை. உள்ளகப் பொறிமுறை ஓர் ஏமாற்று நடவடிக்கையும் கூட. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரண சான்றிதழ் வழங்கப்போவதாக கோட்டபாய ராஜபக்ச கூறியுள்ளார். அப்படியெனில் அத்தனை பேரையும் இந்த அரசாங்கம் கொலை செய்துவிட்டது என்பதுதான் அதற்கான விளக்கம். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அவர்களது பிள்ளைகளைத் தேடி பலர் இறந்தும் விட்டார்கள். அவர்களது போராட்டம் இன்னமும் தொடர்கின்றது. ஆகவே தமிழினத்தின் மீது ஒரு இனப்படுகொலையை இந்த அரசு மேற்கொண்டதை இவரே தனது வாயால் ஒத்துக்கொள்கின்றார். இதனை சர்வ தேசம் உற்றுநோக்குமாகவிருந்தால் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நிலைக்கு எமது போராட்டங்களும் ஒரு செயல் வடிவம் கொடுக்கும். எது எவ்வாறாகவிருப்பினும் எமது நாட்டில் ஜனநாயகம் பேணப்படவேண்டும் என்பதையே நான் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றேன்.

**[நேர்காணல் – இரணியன்]**

## சி.வி.கே.சிவஞானம் அவர்களின் நேர்காணல்...

அப்படியொரு விசாரணை தேவை என கேட்கப்பட வேண்டுமானால் அதை கேட்க வேண்டியவன் வெளியில் இருப்பவன். எதிரே உள்ளவர் தான் கேட்கலாம். நாங்கள் அரசாங்கத்தை பற்றி தான் கேக்கலாம். நீ எங்களுக்கு அநியாயம் செய்தாய். எங்களது இனத்தை அடக்குமுறைக்குள் இருந்து அழித்தாய். இனப்படுகொலை செய்தாய் என்று நாங்கள் குற்றம் சாட்டலாம் அதுதான் முறை. யாராக இருந்தாலும் அவர்களை விசாரிக்கும்படி நாங்கள் கேட்கமுடியாது. நான் ஒரு வழக்கின் முறைப்பாட்டாளர் என்றால் அந்த முறைப்பாட்டை தானே கொடுக்கலாம். என்னை இந்த மக்களை அரசாங்கம் அழித்திருக்கின்றது என்று நாங்கள் குற்றம் சாட்டலாம். அதுதான் எங்களது வேலை அதை செய்யலாம். அதன் பின்னர் வரும் வேலைகளை அவன் பார்த்துக்கொள்ளலாம். எனவே நாங்களாக போய் வில்லங்கத்தில் மாட்டாமல் இருப்பது புத்தியானது.

## பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் வலியுறுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – மாவை சேனாதிராஜா

நேற்று மாலை கொழும்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினரை சந்தித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்கிற தீர்மானத்தினை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அந்த விடயங்கள் குறித்து அரசுடன் கலந்துரையாடுவதற்காகவே அவர்கள் இலங்கை வந் திருக்கிறார்கள். அதேபோல அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் கருத் துக்களைக் கேட்டறிந்துகொள்வதற்காகவே அவர்களின் இந்த விஜயம் அமைந்துள்ள தாக அவர்கள் எங்களிடம் கூறினார்கள்.

குறித்த சந்திப்பில் கலந்துகொண்ட நாம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கியே ஆகவேண்டும். திருத்தம் செய்வதல்ல நீக்கவேண்டும் என்பதை அவர்களிடம் வலியுறுத்திக் கூறியிருக்கின்றோம். இன்றைக்கும் அந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் 15. 20 வருடாங்களுக்கு மேல் சிறைகளில் வாடுகின்றனர். அவர்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்களும் செய்யப்படாதவர்களும் இருக்கிறார்கள். இன்றும் கூட நினைவுகூர்வதற்கான உரிமைகள் மறுக்கப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத் தின் ஊடாக கைதுகள் இடம்பெற்று வருகின்றது. ஆகவே இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்கிற உங்களது தீர்மானத்தை நாங்கள் வரவேற்கிறோம் என நாங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்குக் கூறியி ருக்கிறோம்.



ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தீர்மானத்தை கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும். இலங்கை தமிழர்களின் இனப்பிரச்சினை 50 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் பலவகையான போராட்டங்கள் இடம்பெற்று வந்திருக்கிறது. இன்றும் இடம்பெறுகிறது. இலங்கை அரசு இனப் பிரச்சினைக்கானத் தீர்வு குறித்தும். ஐ.நாவுக்கு ஒத்துழைப்போம் எனக் கூறிவந்தாலும் எங்களுக்கு அதில் நம்பி க்கை இல்லை. ஆகையால் இந் நாட்டின் இனப்பிரச்சினை மிகவும் முக்கியமானது. வெகு விரைவில் தீர்க்கப்படவேண்டியது. தீர்ப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முயற்சி களை மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அத்துடன் அடுத்த பிரச்சினையாகவிருப்பது தமிழ் மக்களது சொந்தக் காணிகள். அவை நீண்டகாலமாக இராணுவத்தினால் அரசினால் அபகரிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் திணைக்களத்தின் ஊடாகவும். மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தின் ஊடாகவும் தமிழர்களின் காணிகளை அபகரிப்பதும். சிங்கள மக்களைக் குடியேற்றுவதுமான தமிழ் மக்களின் இனத்தை இல்லாமலாக்குவதற்கான செயற்பாடுகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சுயநிர்ணயத்தின் அடிப்படையில் இனப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு நீங்கள் உதவியாக இருக்கவேண்டும்.

அதற்கான அழுத்தங்களை நீங்கள் அரசிற்கு பிரயோகிக்க வேண்டும் போன்ற விடயங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளிடம் பேசப்பட்டது. பிரதிநிதிகளும் தாம் அரசுடன் இவை பற்றி பேசவிருப்பதாகவும். நாம் குறிப்பிட்ட கருத்துக்கள் மிகவும் முக்கி யமானவை என்றும் ஐரோப்பிய ஒன்றி யத்தின் நிகழ்ச்சி நிரலில் நாம் கூறிய விடயங்கள் அனைத்தையும் உள்வாங்கி. தாம் அக்கறை செலுத்தி செயற்படுவ தாக எம்மிடம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் கூறியிருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

## கொவிட் தொற்று...

பொது சுகாதாரத்தை முதன்மையான ஒன்றாக உலக நாடுகள் கருத வேண்டும். அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய சுகாதாரக் கட்டமைப்புகளை உருவாக்குவது கடுமையான சூழல்களில் மக்களைக் காக்க இன்றியமையாத ஒன்றாக அமையும். மக்கள் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்தல் மட்டும் போதாது. தனிமனித இடைவெளிகளைப் பின்பற்றுதல், முகக் கவசங்களை அணிதல், கிருமி நாசினிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றை தவறாமல் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## ஐ.நா சர்வதேச சுயாதீன...

ஒஸ்லோ நோர்வே மற்றும் உலகம் ஆகியன இரண்டு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமை காரணமாகவே நான் தேர்தலில் போட்டியிட்டேன். அதிகரித்துவரும் சமத்துவமின்மை மற்றும் காலநிலை மாற்றம் ஆகியனவே அந்த இரண்டு விடயங்கள். ஒஸ்லோவின் பிரதிமேயராக எனக்கு ஆறு வருடங் கள் கிடைத்த அனுபவத்தை நான் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். பசுமை மாற்றம், அதிகரிக்கும் சமூக சமத்துவமின்மை ஆகியவற்றை எதிர்கொள்வதை நோக்கி நாங்கள் செயற்பட்டோம். முக்கியமாக அதிகளவு மக்களை எப்படி தொழில் வாழ்க்கைக்குள் ஈர்ப்பது என்பது குறித்து கவனம் செலுத்தினோம், தொழில்புரிந்து வரி செலுத்தும் மக்களே நோர்வேயை செல்வந்த நாடாக மாற்றுகின்றனர், எங்கள் சமூக நலன் புரி அரசு வலுவானது. சமூக பொருளாதார பாலியல் சமத்துவத்திற்குள் நாங்கள் செயற்படுகின்றோம்.

உங்களில் பலருக்கு இலங்கையுடனான எனது உறவு குறித்து கேள்வி கள் இருக்கலாம். நான் இலங்கையில் பிறந்ததால் நான் இலங்கையுடனும் புலம் பெயர் தமிழர்களுடனும் தொடர்பை கொண்டிருப்பேன். நான் இலங்கையில் பிறந்தேன். 13 வருடங்கள் தமிழ் பாடசாலைக்கு சென்றேன், தமிழ் எனது தாய்மொழி. இலங்கை மக்களின் நீண்டகால பிரச்சினைகளிற்கு தீர்வு வேண்டும் என்பது குறித்த அனுதாபமும் பச்சா தாபமும் எனக்கு உள்ளது. இலங்கை என வரும்போது முதலில் சர்வதேச சமூகத்திடமிருந்து சில விடயங்களை நாங்கள் செய்யலாம்.அதேவேளை இலங்கை மக்கள் இணைந்து தங்களிற்காக செயற்பட வேண்டிய விடயங்கள் பல உள்ளன. முதலாவதாக யுத்தம் குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும். இலங்கையின் போரில் இறுதியில் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என ஐநா தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்றது. இலங்கை அரசாங்கம் சர்வதேச சுயாதீன விசாரணைக்கு அனுமதியளிக்க வேண்டும். ஏனென்றால் ஜனநாயகத்தில் வெளிப்படைத் தன்மை என்பது மிகவும் முக்கியமான அம்சம். நல்லிணக்கத்திற்கும் இது அவசியமான விடயம். இரண்டாவது யுத்தம் மோதல்கள் குறித்து சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தவேண்டும். தொழில்கட்சியின் இளைஞர் லீக்கின் உறுப்பினராக நான் இதனை முன்னெடுத்தேன். மூன்றாவது நோர்வேயிலிருந்து இலங்கை யுடனான எங்கள் உறவை தொடர வேண்டும், பகிஷ்கரிப்பு ஒரு வழிமுறை என நான் கருதவில்லை. எதிர்கால வெளிவிவகார அமைச்சரும் புதிய வெளிவிவ கார அமைச்சரும் இது குறித்து சிறந்த திட்டமிடல்களை கொண்டிருப்பார்கள் என நான் கருதுகின்றேன். இறுதியாக அதிகரித்துவரும் சமூக ஏற்றத்தாழ்வுகள் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றிற்கான தீர்வை காணும்போது நோர்வே ஒரு முன்மாதிரியாக விளங்கவேண்டும் என நான் விரும்புகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

# டிக்டொக் : 100 கோடி பயனர்களை கடந்து சாதனை




'மாதம் 100 கோடி பயனர்கள் டிக்டொக்கைப் பயன்படுத்துகிறார்கள்' எனக் கூறியுள்ள டிக்டொக் நிறுவனம், பயனர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளது. வீடியோ மூலம் இசையுடன் நடனம் மற்றும் தனித்திறன்களை வெளிப்படுத்தும் வகையிலான செயலிகளில் உலகம் முழுவதும் பிரபலமானது டிக் டொக் செயலி. இது சீனாவைச் சேர்ந்த 'பைட் டான்ஸ்' நிறுவனத்தின் செயலி என்றாலும் இதைப் பயன்படுத்துபவர்கள் அமெரிக்கா, ஐரோப்பா, பிரேசில் மற்றும் இந்தியாவில் தான் அதிகம்.

கடந்த 2018ம் ஆண்டு ஜனவரி மாதம் 5.5 கோடி தினசரி பார்வையாளர்களை மட்டும் கொண்டிருந்த இச்செயலியை தற்போது மாதம் 100 கோடி பேர் உபயோகப்படுத்துவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. மற்ற சமூக வலைதளமான பேஸ்புக் மாதம் 350 கோடி பயனாளர்களையும், யூடியூப் 345 கோடிப் பயனாளர்களையும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட காலத்தில் இத்தனை பெரிய வெற்றியை ஈட்டிக் கொடுத்தற்காக பயனாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக டிக்டொக் நிறுவனம் தெரிவித்திருக்கிறது. இந்தியாவில் 59 செயலிகளை மத்திய அரசு கடந்த ஆண்டு தடை செய்தது. அதில், சமூகத்தை சீரழிக்கும் வகையில் செயல்படுவதாக எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையில், டிக்டொக் செயலியையும் தடை செய்தது குறிப்பிடத்தக்கது.

# இரு வேறு தடுப்பூசிகளைப் பெற்றால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது




ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்ட அஸ்ட்ரா செனேகா தடுப்பூசி, உருமாறிய கொவிட் வைரஸ்களை எதிர்க்கும் ஆற்றல் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த தடுப்பூசி, இந்தியாவில் 'கோவிஷீல்ட்' என்ற பெயரில் பயன்பாட்டில் உள்ளது. இதே போல் ரஷ்யாவில் உருவாக்கப்பட்ட ஸ்புட்னிக்-வி தடுப்பூசியின் மற்றொரு வடிவம் ஸ்புட்னிக் லைட்.

இந்த அஸ்ட்ரா செனேகா, ஸ்புட்னிக் லைட் ஆகிய தடுப்பூசிகளை இரு தவணைகளாக அடுத்தடுத்து செலுத்திக்கொண்டால் எப்படி இருக்கும் என்பதை அறிய, ரஷ்ய நேரடி முதலீட்டு நிதியத்தின் ஆதரவுடன் அஜர்பைஜான் நாட்டில் ஆய்வு நடத்தப்பட்டது.

இதற்காக 100 தன்னார்வ தொண்டர்கள் பயன்படுத்தப்பட்டனர். கடந்த பெப்ரவரி மாதம் இந்த ஆய்வு தொடங்கியது. முதலில், அஸ்ட்ரா செனேகா தடுப்பூசியும், 29 நாட்கள் கழித்து, ஸ்புட்னிக் லைட் தடுப்பூசியும் செலுத்தப்பட்டன. அதன் பின், 57வது நாட்களில், 85 சதவீதம் பேருக்கு, நோய் எதிர்ப்பு சக்தி 4 மடங்கு அதிகரித்து இருப்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

# ஐதராபாத் அணிக்கு விளையாடமாட்டேன் - வோர்னர்


சன் ரைசர்ஸ் ஐதராபாத் அணியில் டேவிட் வோர்னர் கடந்த சில போட்டிகளில் விளையாடவில்லை. இந்நிலையில் தன்னை இனி அணியில் பார்க்க முடியாது என்று டேவிட் வோர்னர் தெரிவித்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐபிஎல் தொடரில் சன் ரைசர்ஸ் ஐதராபாத் தொடக்கத்தில் இருந்து தோல்விகளை மட்டுமே சந்தித்து வந்தது. இந்நிலையில் கடந்த 2016ம் ஆண்டு கெப்டனாக சிறப்பாக செயல்பட்ட டேவிட் வோர்னர், அணியை கோப்பையை உச்சி நுகர செய்தார். ஆனால் கடந்த சில சீசன்களாக அவருக்கும் ஐதராபாத் அணி நிர்வாகிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவி வருவதாக கூறப்படுகிறது. இதனால் தற்போது கெப்டனாக கேன் வில்லியம்சன் செயல்பட்டு வருகிறார்.

மேலும் இவருக்கு அணியில் இடம் இன்றி போட்டிகளில் இருந்தும் ஓரம்கட்டப்பட்டு வருகிறார். இந்நிலையில் போட்டியில் அவரை காணாத ரசிகர் ஒருவர் வருத்தத்துடன் ஒரு பதிவை வெளியிட்டிருந்தார். அதற்கு பதில் அளித்த டேவிட் வோர்னர், இனிமேல் என்னை பார்க்க முடியாமல் கூட போகலாம் என்றும் ஆனால் தொடர்ந்து அணிக்கு ஆதரவு கொடுங்கள் என்று தெரிவித்துள்ளார். இதனால் ரசிகர்கள் சோகத்திலும், அதிர்ச்சியிலும் உள்ளனர். இதற்கிடையில் சமீபத்தில் பயிற்சியாளர் அளித்த பேட்டியில் அடுத்துவரும் போட்டிகளில் வோர்னர் பார்வையாளராகவே தொடர்ந்து, இளம் வீரர்களுக்கு வழிகாட்டுவார் என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. **(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)**




# 49 ஆண்டுகளாக பூமியை கண்காணிக்கும் செயற்கைக்கோள்



உலகின் மிக முக்கியமான செயற்கைக்கோள், கலிஃபோர்னியாவிலிருந்து நேற்று செப்டம்பர் 27ஆம் திகதி திங்கட்கிழமை ஏவப்பட்டது. லேண்ட்சாட்-9 என்பது சுமார் கடந்த 50 ஆண்டுகளாக பூமியை கண்காணித்து வரும் விண்கலன்களின் தொடர்ச்சியாக இருக்கிறது. வேறு எந்த ரிமோட் சென்சிங் அமைப்பும் நமது பூமியின் மாறி வரும் நிலை குறித்த நீண்ட, தொடர்ச்சியான பதிவை வைத்திருக்கவில்லை.

லேண்ட்சாட் - 9 வான்டன்பெர்க் விண்வெளிப்படை தளத்திலிருந்து அட்லஸ் ரொக்கெட்டில் உள்ளூர் நேரப்படி காலை 11:12க்கு ஏவப்பட்டது. அப்பல்லோ விண்வெளி வீரர்கள் பூமியைத் திரும்பிப் பார்த்த எடுத்த படங்கள் தான், நம் பூமிக்கு மேல் நிரந்தரக் கண்காணிப்பு வேண்டும் என்கிற எண்ணத்தை உறுதிப்படுத்தியது. 1972 ஆம் ஆண்டில், அமெரிக்க விண்வெளி நிறுவனம் (நாசா), அமெரிக்க புவியியல் ஆய்வு (யுஎஸ்ஜிஎஸ்) ஆகிய இரண்டும் இணைந்து, அவற்றின் புவி வள ஆற்றல் தொழில்நுட்ப செயற்கைக்கோளை ஏவத் தொடங்கின.

இந்நிலையில், ஒன்பதாவது இமேஜிங் விண்கலம் விண்ணில் ஏவப்பட்டுள்ளது. அத்திட்டம் தான் பின்னர் லேண்ட்சாட் திட்டம் என்று அழைக்கப்பட்டது. நாசா மற்றும் யுஎஸ்ஜிஎஸ் விண்கலத் தொடர் தான் பூமியின் மாற்றத்தின் வலுவான பதிவுகள். லேண்ட்சாட் செயற்கைக் கோள்கள், பெருநகரங்களின் வளர்ச்சி, விவசாயத்தின் பரவல், கடற்கரைகள், காடுகள், பாலைவனங்கள், பனிப்பாறைகளின் வளர்ச்சி மற்றும் அதன் மாற்றங்களை பட்டியலிட்டுள்ளது. காட்டெருமை, வோம்பாட்ஸ், மரங்கொத்திப் பறவை, வால்ரஸ் என பல விலங்குகளைக் கூட கண்காணிக்க இந்த செயற்கைக் கோள்கள் பயன்படுத்தப்பட்டன.

"கடந்த அரை நூற்றாண்டில் பூமி எவ்வாறு மாறியது என்பதற்கான ஒரு அற்புதமான வரலாற்றை நாங்கள் சேகரித்துள்ளோம்," என்கிறார் நாசாவின் லேண்ட்சாட் - 9 திட்ட விஞ்ஞானி முனைவர் ஜெஃப் மாசெக். "உதாரணமாக, காட்டுத் தீ, சூறாவளி, பூச்சி வெடிப்புகள் போன்ற இயற்கை இடையூறுகளை நாம் காண முடிகிறது."

"சுற்றுச்சூழல் அமைப்புகளில் பருவநிலை மற்றும் பருவநிலை மாற்ற பாதிப்புகளை நாம் குறிப்பாக பார்க்க முடிகிறது. வெப்பமான பருவநிலை காரணமாக உயர் அட்சரேகை பகுதிகளில் செடி கொடிகளின் அதிகரிப்பு மிகுந்த பகுதிகளை நாங்கள் வரைபடமாக்கியுள்ளோம். அதே நேரத்தில் குறைவான நீர் கிடைக்கும் மற்றும் பாதி வறண்ட சுற்றுச்சூழலைக் கொண்ட பகுதிகளில் தாவரங்கள் குறைந்து வருவதையும் நாங்கள் பார்த்தோம். " 1982ஆம் ஆண்டு முதல், லேண்ட்சாட் - 4 செயற்கைக் கோள் முதல், இந்த அமைப்பு தரையில் உள்ளவைகளை 30 மீட்டர் தொலைவு வரை நுட்பமாக காண முடிந்தது. இப்போது மிகவும் கூர்மையாக உற்று நோக்கும் (பத்து சென்டிமீட்டர் வரை காணப்படும்) ஏராளமான பிற இமேஜிங் தொழில்நுட்ப விண்கலங்கள் உள்ளன. ஆனால் நீண்ட காலத்துக்கு எந்த ஒரு விண்கலங்களும் லேண்ட்சாட் அருகில் கூட வருவதில்லை. இந்த தரவுகளை எங்கும், யார் வேண்டுமானாலும் இலவசமாக பயன்படுத்தலாம்.

லேண்ட்சாட் - 9 செயற்கைக் கோள், அதன் அட்லஸ் ரொக்கெட்டின் உச்சியில் இருந்து செயல்பாட்டுக்கு வருவதற்கு முன் சில பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. அட்லஸ் ரொக்கெட் இந்த செயற்கை கோளை 680 கிலோ மீட்டருக்குக் கீழ் கொண்டு சேர்த்துவிட்டது. லேண்ட்சாட் செயற்கைக் கோள் தன் த்ரஸ்டர்களைப் பயன்படுத்தி, தன் கண்காணிப்பு உயரமான 700 கிலோமீட்டரை விட சற்று உயரத்தை அடைய வேண்டும். சில வாரங்களுக்குப் பிறகு, லேண்ட்சாட் 9 செயற்கைக் கோள் படங்களை எடுக்கத் தொடங்கும். அதை 2013ஆம் ஆண் டில் ஏவப்பட்ட லேண்ட்சாட் - 8ன் படங்களோடு ஒப்பிடலாம்.

இந்த பகுப்பாய்வு புதிய விண்கலத்தால் கண்டறியப்பட்ட வண்ணங்களை ஐந்து தசாப்தங்கள் பழமையான லேண்ட்சாட் காப்பகத்தில் உள்ள பழைய படங்களுடன் நேரடியாகப் பொருத்துவதை உறுதி செய்யும். கடந்த ஆறு ஆண்டுகளாக, லேண்ட்சாட் ஐரோப்பிய ஒன்றியத்தின் சென்டினல் -2 செயற்கைக்கோள்களின் விண்மீன் தொகுப்பில் பறந்து வருகிறது. மீண்டும், அவர்களின் உருவப்படங்கள் துல்லியமாக அமைக்கப்பட்டன. இதனால் அவர்கள் தங்கள் அமெரிக்க சகாக்கள் பூமியைப் பார்ப்பது போலவே பார்க்கிறார்கள்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய அமைப்புகள் இரண்டையுமே கட்டமைப்பதற்கும், இயங்குவதற்கு அதிகம் செலவாகும். லேண்ட்சாட் - 9 செயற்கைகோளின் வாழ்க்கைச் சுழற்சிக்கான செலவு கூட பில்லியனுக்கு அருகில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சில மில்லியன் டாலர்களில் ஏவப்படும் வணிக ரீதியிலான புவி கண்காணிப்பு செயற்கைக் கோள்கள் இருக்கும்போது, இதுபோன்ற திட்டங்களின் பணத்திற்கான மதிப்பு குறித்து சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

"நிறைய விஷயங்களைச் செய்ய வணிக நிறுவனங்கள் எங்களை அனுமதிக்கின்றன. ஆனால் அவை லேண்ட்சாட் மூலம் நாங்கள் செய்யும் கண்காணிப்புகளுக்கு மாற்றாக இல்லை. உதாரணமாக வணிக அமைப்புகள், பொதுவாக - அவர்கள் அடிக்கடி கண்காணிக்க முடியும், ஆனால் நாங்கள் லேண்ட்சாட் செயற்கைக் கோளைக் கொண்டு கண்காணிக்கும் எல்லா அலைவரிசையையும் அவர்கள் கவனிப்பதில்லை." என்று நாசாவின் எர்த் சயின்ஸ் இயக்குனர் முனைவர் கரேன் செயின்ட் ஜெர்மைன் பிபிசி செய்திக்கு தெரிவித்தார். இந்த கருத்தை சான்-பிரான்சிஸ்கோவை தளமாகக் கொண்டு இயங்கும் பிளானட் என்கிற நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் வில் மார்ஷல் எதிரொலித்தார். இந்நிறுவனம் இன்று 200க்கும் மேற்பட்ட சிறிய இமேஜர்களை சுற்றுப்பாதையில் இயக்கி வருகிறது.

நாசா தனது நிறுவனத்தின் (பிளானட்) தரவை, அதன் காலநிலை மாதிரிகளை மேம்படுத்துவதற்காக வாங்கியதாகவும், பிளானட் நிறுவன பொறியாளர்கள் தங்கள் சொந்த தயாரிப்புகளை மேம்படுத்த லேண்ட்சாட்டின் படங்களை நம்பியிருப்பதாகவும் அவர் கூறினார்.